பொது சுற்றறிக்கை இல: 02-113/2013

எனது இல: FV/SA/5/87/14,

களஞ்சியப் பொருட்கள் நுண்ணாய்வுக் கிளை,

"சுவசிறிபாய"

சுகாதார அமைச்சு,

கொழும்பு 10.

26.06.2013.

சுகாதார அமைச்சின் கீழ் வரும் சகல வைத்தியசாலைகள்
மற்றும் சுகாதார நிறுவனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்,

**ஏற்கனவே பழுதடைந்த நிலையிலுள்ள பாவனைக்குதவாத பழைய வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் பொறிகள் என்பவற்றை விற்றுத் தீர்த்தல்.**

நாடு பூராவும் அமைந்துள்ள அரசாங்க நிறுவனங்களில் பாவனைக்குதவாது பழுதடைந்த நிலையிலுள்ள பழைய வாகனங்கள், இயந்திரங்கள், பொறிகளை அடுத்த 03 மாதங்களுக்குள் அவற்றை விற்றுத் தீர்ப்பதற்கு திட்டம் ஒன்றை தயாரித்து பழைய பொருட்களை விற்றுத் தீர்க்கும் சபையின் தீர்மானத்திற்மைய பகிரங்க ஏலவிற்பனையினூடாக அவற்றை விற்க முடியாவிட்டால், நிதி ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக அப்பொருட்களின் உண்மையான தரம் மற்றும் தொழில் நுட்ப அறிக்கை தொடர்பான தகுந்த உறுதிப்படுத்தலின் பின்னர் கழித்துவிடப்பட்ட பொருட்களைவிற்றுத் தீர்க்கும் செயன் முறைக்கு அமைவாக இரும்பாக பாவிப்பதற்கு ஓறுவல உருக்கு கூட்டுத்தாபனத்திற்கு உரிய நடைமுறைகளை பின்பற்றி அவற்றை ஒப்படைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அலுவலகத்தின் 2013.06.05 ஆம் திகதிய PCMD/PR/2013 ஆம் இலக்க கடிதத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

02. அகற்றப்பட வேண்டிய வாகனங்கள் மற்றும் இயந்திரம், பொறிகள் என்பன இனம் காணப்பட்டு, அத்தகைய வாகனங்கள் தொடர்பாக போக்குவரத்துப் பிரிவின் பணிப்பாளருக்கும், இயந்திரங்கள் , பொறிகள், (சத்திரசிகிச்சை உபகரணங்கள்) தொடர்பில் உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவுக்கும் அறிவிக்கப்பட வேண்டும்.

03. போக்குவரத்துப் பிரிவின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஒருவர், பாவனைக்குதவாதது என இனம் காணப்பட்ட வாகனங்களை அவை உண்மையில் பாவனைக்குதவாத நிலையில் தான் உள்ளது என உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறே உயிரியல் மருத்துவப் பொறியியல் பிரிவின் பிரதிநிதி ஒருவர் அகற்றப்படுவதற்கு உள்ள சத்திரசிகிச்சைக்குரிய உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் தொடர்பாகவும் அவை பாவிக்கமுடியாத நிலையில் உள்ளதாக உறுதிப்படுத்துதல் வேண்டும். இந் நோக்கத்திற்கு, சம்பந்தப்பட்ட உபகரணங்கள் தொடர்பில் போதியளவு தொழில்நுட்ப அறிவினை உடைய ஒரு அலுவலரின் உறுதிப்படுத்துதல் வேண்டப்படுகின்றது.

04. அகற்றப்பட வேண்டிய வாகனங்கள், இயந்திரங்கள் பொறிகள் தொடர்பான பட்டியல் ஒன்று போக்குவரத்துப்பிரிவின் பணிப்பாளருக்கும், உயிரியல் மருத்துவப் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கும் அனுப்பப்பட வேண்டும்.

05. பொருட்களை விற்றுத் தீர்க்கும் சபை ஒன்று வாகனங்கள் தொடர்பில் நியமிக்கப்பட வேண்டும். இச்சபை, பிரதான உள்ளக கணக்காய்வுப் பிரிவின் அலுவலர், களஞ்சியப் பொருட்கள் நுண்ணாய்வுக் கிளையின் அலுவலர் மற்றும் போக்குவரத்துக் கிளையின் ஒரு அலுவலர் என்பவர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இச்சபைக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

06. நிதிசார் அதிகாரங்களை கையளிக்கும் சுற்றறிக்கையின் இல.30 இன் பிரகாரம் சத்திரசிகிச்சை உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை விற்பது தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

07. விற்றுத் தீர்க்கும் சபையினால் விற்றுத் தீர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட வாகனங்களை புகைப்படம் எடுத்தல் வேண்டும்.

08. மோட்டார் வாகன மற்றும் போக்குவரத்து திணைக்களத்தின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஒருவர், கணக்காளர் ஒருவர், போக்கவரத்துப் பிரிவின் பிரதிநிதி ஒருவர், பிரதம உள்ளக கணக்குப் பிரிவின் அலுவலர் மற்றும் களஞ்சியப் பொருட்கள் நுண்ணாய்வுக் கிளையின் அலுவலர் அடங்கிய சபை ஒன்று வாகனங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு நியமிக்கப்பட வேண்டும்.

09. "பெறுமதி மதிப்பீட்டுச் சபை" யின் அறிக்கை கிடைத்த பின்னர், பகிரங்க ஏலத்தில் அல்லது விலைகோரல் அறிவித்தல் மூலம் அத்தகைய வாகனங்களைவிற்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

10. மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் மூலம் இந்த வாகனங்கள் மற்றும் இயந்திரப் பொறிகளை விற்கமுடியாதுவிட்டால், உரிய வழிமுறைகளினூடாக ஒறுவல உருக்கு கூட்டுத்தாபனத்திடம் அவற்றை கையளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

11. 01 – 13 / 2006 மற்றும் 01 - 13 / 2006 எனும் இலக்கங்களையுடைய பொது சுற்றறிக்கைகளுக்கு உங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது. இச் சுற்றறிக்கைகள் பாவனைக்குதவாத பொருட்களை அகற்றுவது தொடர்பில் இதற்கு முன்னர் வெளியிடப்பட்டதாகும். அதிலுள்ள அறிவுறுத்தல்கள் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் இ சுற்றறிக்கைகளுக்கு மேலதிகமானதாகும். 03 மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் இவ் விடயம் தொடர்பில் உம்மால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அதன் நிலைப்பாடுகள் தொடர்பில் எனக்கு அறிவிக்குமாறு நீர் வேண்டப்படுகின்றீர். அத்துடன் உம்முடைய நிறுவனத்தில் அவ்வாறு அகற்றப்பட வேண்டிய பழைய வாகனங்கள் அல்லது இயந்திரம், பொறிகள் இல்லாவிட்டால் அது பற்றியும் எனக்கு அறிவிக்கும் படி வேண்டப்படுகின்றீர்.

இது தொடர்பான மேலதிக் விபரங்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பாளர்களிடம் தொடர்பு கொள்ளவும்.

பணிப்பாளர் (நிதி) களஞ்சியப் பொருட்கள் நுண்ணாய்வு 011 2667903
(இயந்திரம், பொறிகள் மற்றும் ஏனையவை) 071 4413311

பணிப்பாளர் (போக்குவரத்து) 011 2679164
(சகல வாகனங்கள்) 071 2202258

டாக்டர். வை.டி.நிஹால் ஜயதிலக
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

பிரதிகள்:

1. ஜனாதிபதி செயலாளர் - தகவலுக்காக
2. குணக்காய்வாளர் தலைமை அதிபதி - தகவலுக்காக
3. பிரதம உள்ளக கணக்காய்வாளர் - தகவலுக்காக
4. பணிப்பாளர் (போக்குவரத்து) - தகவலுக்காக